# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள் – 16.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.CP.6133/F/2024**

திரு சு. ரமேஷ் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல் - 637 003. .. பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 16.07.2024 |
| மனுதாரரின் புகார் (CP) மனு நாள் | 18.12.2024 |

****

**ஆணை**

இவ்வழக்கு இன்று (16.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு சு. ரமேஷ் என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு கோ. குமரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், தனது கோரிக்கை விண்ணப்பத்திற்கு அளிக்கப்பட்ட பகிர்மானப் பதிவேட்டு எண் என்ன என்பது பற்றிய விவரம், தனது கோரிக்கை விண்ணப்பம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் என்னென்ன வகையான துறைகள் இயங்குகிறது அத்துறைகளின் என்னென்ன வகையான ஏடுகள், பேரேடுகள், குறிப்பேடுகள், பதிவேடுகள், இரத எடுகள் மற்றும் ஆவணங்கள் என்னென்ன என்பது பற்றிய விவரம், தங்கள் துறையில் தங்கள் துறையின் அலுவலக கோப்புகளை பார்வையிட அனுமதி உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 13 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(1)-ன் கீழான புகார் மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் புகார் மனு இன்று (16.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது மனுவில் கோரியுள்ள தகவல்கள் குறித்து நாளதுவரையில் தனக்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், மேற்படி தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் மனுவில் கோரியுள்ள தகவல்கள் திருச்செங்கோடு, வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தை சார்ந்தவை என்பதால் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவ 6(3)-ன்கீழ், மூ.மு.38308/2024/ஓ3 நாள் 19.09.2024 தேதியிட்டு அவ்வலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டதாகவும், அத்தகவலை மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களையும் இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், கீழ்க்கண்ட உத்தரவு இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகிறது :-

- மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரிய தகவல்களை மனுதாரருக்கு முழுமையாக '**தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது**' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் / பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் புகார் மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.CP.6133/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத்தகவல் அலுவலர் /
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாமக்கல் - 637 003.

**<u>வழக்கு எண்.CP.6133/F/2024</u>**
பொதுத் தகவல் அலுவலர் /
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
திருச்செங்கோடு - 637 211, நாமக்கல் மாவட்டம்.

**<u>வழக்கு எண்.CP.6133/F/2024</u>**
<u>மனுதாரர்</u>
திரு சு. ரமேஷ்,
எண்.71-H, பூசாரி காடு, காவேரி நகர்,
குமாரபாளையம் - 638 183,
நாமக்கல் மாவட்டம்.

Copy to: File
SNPS / 23.04.2025